தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1980 ஜூன் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

சொற்களில் பயனுடைய சொற்களை மட்டும் சொல்லுதல் வேண்டும்; பயனற்ற சொற்களைச் சொல்லுதல் கூடாது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினா.

நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணிகளுக்கென நில ஆர்ஜிதம்.

*இ. கா. வி. எண் 1—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணிகளுக்கென விவசாயி களிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு ஈட்டுத் தொகையும், அவர்களுக்கு வேலைவாய்ப்பும் குடியிருப்பு மனையும் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தும், நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால், வேலை ஆரம்பித்த நேரத்தில் மறியல் எதும் நடைபெற்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்க நிறுவனத்தினருடனும், தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிற்துறை மற்றும் வருவாய்த் துறைகளின் செயலர்களுடனும், இதுபற்றி பேச இருக்கின்றேன். சுமுகமான முடிவு எற்படுமென நம்புகின்றோம்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலை ஆரம்பிப்பதற்காக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்து, கிரயம் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றரை வருஷம் ஆகியும் அவர்களுக்கு மாற்று இடம், மாற்று மனை, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு இன்று வரையில் அந்தப் பகுதி மக்களுக்கு உறுதியளிக்கப்படவில்லை. ஆகவே, அங்கே வேலையை ஆரம்பிக்கச் செல்லும்போது அங்குள்ள மக்கள் எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு உத்தரவாதம் அளித்த பிறகு வேலையைத் தொடங்குங்கள் என்று மறுப்புத் தெரிவித்தார்கள். அதன் காரணமாக அங்கே சில சச்சரவுகள் ஏற்பட்டு, 55 கிராமவாசிகள் போலீசாரால் கைது செய்யப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம்; கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஆர். தியாகராசன் : அந்தப் பகுதி மக்களுக்கு இன்றுவரையில் உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்ட போது நான் வாய்மொழியாக உத்தரவாதம் அளிக்க முடியுமே தவிர எழுத்து மூலமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். எனவே அந்தப் பகுதி மக்களுக்குச் சேரவேண்டிய உரிமை அவர்களுடைய நிலங்களுக்கு நியாயமான விலை நிர்ணயம், வீடுகளுக்கு நியாயமான விலை நிர்ணயம், அங்கே வாழக்கூடிய ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு போன்றவைகளுக்கு நம்முடைய தமிழக அரசு உத்தரவாதம் அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகத்தான், அதுபற்றிப் பேசுவதற்காகத்தான் நெய்வேலி சுரங்க நிறுவனத்துடனும், அதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் துறை செயலர், வருவாய்த்துறைச் செயலர் ஆகியோருடனும் இன்று மாலை பேச இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன : தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு ஈட்டுத்தொகை வழங்குவது பற்றியும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு, வீட்டு மனை ஆகியவை வழங்கப்படுவது பற்றியும் குறிப்பிடப்படுகின்றபோது அது எந்தக் காலத்தில் முடிக்கப்படும் என்பதை அரசு தெரிவிக்குமா ?

1980 ஜூன் 27]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இப்போது பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே எப்போது தேவையோ அந்த நேரத்தில் அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் இந்த அமைப்பு ஏற்படுவதால் எத்தனை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த விவசாயிகளுக்கு அரசு மாற்று உதவி செய்வதற்கு என்ன திட்டம் வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்கிறபோது ஏற்படுகிற இழப்புக்கும், எதிர்கால வாழ்க்கையில் ஏற்படுகிற இழப்புக்கும் தகுந்தாற்போல அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படவேண்டும். இன்னும் அதிலே சரியான முறை பின்பற்றப் படவில்லை. ஆகவே இது குறித்து மத்திய அரசின் 'கைட் லைன்' என்ன? இனிமேலாவது இதிலே ஒரு மாறுதல் ஏற்படுத்துவதற்கு மாநில அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் மாநில அரசு அதிகாரிகளால் ஏற்கெனவே நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் காம்பென்சேஷன் கொடுத்தது போதாது என்றும் அதிகமாக வேண்டும் என்றும் விவசாயிகள் கேட்கிறார்கள். ஆகவே நிலக்கரி சுரங்க நிறுவனத்துடன் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கின்ற காம்பென்சேஷனை அதிகப் படுத்தித் தருவதற்காகத்தான் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால், அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]